16.07.2025

அ.வ.எண். 137/2017

பி.சா.1 - ராஜேஸ்வரி, க/பெ. ரமேஷ்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 16.07.2025 is accordance with the provision of Act X of 3331

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கணபதி கவுண்டருக்கு 5 மகள்கள் மற்றும் 1 மகன் உள்ளனர். 1961 ல் ராமன கவுண்டர் கிரயம் பெறும்போது பெண் மக்கள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். பெண் மக்களுடைய பாகத்தை பொறுத்து விடுதலை ஆவணம் எழுதி தரவில்லை என்றால் சரிதான். கிரயம் பெறும்போது கணபதி கவுண்டரின் மகனுக்கு 12 வயது என்றும், அவர் மைனர் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். பொன்னுச்சாமியின் தகப்பனார் கணபதி கவுண்டர் இறந்தபோது பொன்னுசாமிக்கு சுமார் 12 வயது என்றால் எனக்கு தெரியாது. கணபதி கவுண்டர் இறந்தபோது பொன்னுசாமிக்கு சமார் 10 வயது என்றால் அது எனக்கு தெரியாது. அது பற்றி நான் தற்போது வரை விசாரணை செய்யவில்லை என்றால் அந்த வயது இருந்ததால் தான் எழுதி இருப்பார்கள்.

2. கணபதி கவுண்டரின் மனைவி சின்னம்மாள் (எ) வள்ளியம்மாளுக்கு தாவா சொத்து முழுவதையும் கிரயம் எழுதி கொடுக்க எவ்வித உரிமையும் பாத்தியமும் இல்லை என்றால் எனக்கு தெரியாது. நான் எனது வழக்குரையில் சொன்னாவாறு கணபதி கவுண்டர் 1950 முன்பே இறந்திருந்தால் அவருக்கு பொன்னுசாமி என்கிற ஒரு மகன் இருந்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி விவரங்களை தெரிந்துகொண்டு உண்மையை மறைத்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்தை தவிர மீதமுள்ள சொத்துக்களில் ஒரு பகுதியை சரஸ்வதி(3 ம் பிரதிவாதி) அனுபவம் செய்து வருகிறார் என்றால் அவ்வாறு இல்லை, இந்த தாவா சொத்தை தவிர இதர சொத்துக்களை கிரயம் கொடுத்துவிட்டனர். தாவா சொத்தை பொறுத்து பெண் மக்கள் யாரும் கிரயம் செய்து கொடுக்கவில்லை என்றும்,

விடுதலை ஆவணம் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான். 1961 ம் ஆண்டில் மைனரின் சொத்தை கிரயம் பெறும்போது நீதிமன்றத்திடம் அனுமதி பெறவில்லை என்றால் அது பற்றி தெரியாது. ராமன கவுண்டரின் மகள் மயிலாத்தாள் ஒரே மகள் என்பதை காட்ட எந்த விதமான ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மயிலாத்தாளின் மகள் ஆவேன். மேற்படி வழக்கு சொத்து மயிலாத்தாளுக்கு பாத்தியப்பட்டால் அவரது இறப்பிற்கு பின்னிட்டு வாரிசு அடிப்படையில் எனக்கும், என் உடன் பிறந்தவர்களுக்கும் பாத்தியம் என்றால் சரிதான்.

4. அவ்வாறு உள்ள பட்சத்தில், நானும், எனது தம்பி மற்றும் தங்கையும் சேர்ந்து என் தகப்பனாருக்கு சொத்தை கிரயம் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் என் தகப்பனார் பெயரில் சொத்து இருந்தால் என் அப்பாவை எல்லோரும் பார்த்து கொள்வோம் என்பதால் அவருக்கு கிரயம் செய்து கொடுத்தோம். மேற்படி விவரங்களை கிரய பத்திரத்திலும், நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

5. ராமன கவுண்டரின் சொத்தை பொறுத்து எந்தவித ஆவணமும் இல்லாத காரணத்தால் நான் தான் வாரிசு என்று சொல்லி பொய்யாக, போலியான கிரய பத்திரம் ஏற்படுத்தி உள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக வழக்கு சொத்து வெறும் காடாக இருந்தது என்றால் சோளம் போடுவோம். இதே காலையில் மீதமுள்ள சொத்துக்களும் வெறும் காடாக இருந்தது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் மீதமுள்ள பூமியில் வீடுகள் உள்ளதாக சாட்சியம் அளிக்கிறார்.

6. தாவா சொத்துக்களை தவிர வாதியின் குடும்பத்திற்கு பாகம் பிரித்து கொள்ள வேறு சொத்துக்கள் இல்லாத நிலையில் PARTIAL PARTITION என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. மீதமுள்ள சொத்துக்களை கணபதி கவுண்டரின் அனைத்து பெண் வாரிசுகளும் கிரயம் கொடுத்துவிட்டார்கள் என்றும், தாவா சொத்துக்களை அவர்கள் ஒருபோதும் கிரயம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தின் பாகத்தில் 9/49 பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனது

பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் சரியானவை தான்.

7. எனது பிரமாண வாக்குமூலத்தில் 8ம் பக்கத்தில், 6ம் பிரதிவாதி தாவா சொத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்திய பின்னர் தான் வாதி போலியான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்று சொல்லி உள்ளேன், என்றும் என்ன போலியான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆவணங்களை கொடுத்துள்ளார்கள். என்ன போலியான ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்று தெரியாது. கணபதி கவுண்டரின் வாரிசான பொன்னுச்சாமி மற்றும் வள்ளியம்மாளிடம் பெற்ற கிரயத்தை பொறுத்து மட்டும் தான் எனக்கு பாத்தியம் உள்ளது என்றும், இந்த பி.சா.ஆ.7 கிரய சாசனம், வாதி மற்றும் மற்ற பெண் வாரிசுகளின் பங்கு பாத்தியத்தை எந்தவகையிலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

8. நான் தனிப்பட்ட பாத்தியத்தில் உள்ளேன் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் 9/49 பாகம் உள்ளதால் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல. பி.சா.ஆ.1 முதல் 6 மற்றும் 10, 11 ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் என்றும், அது வாதியின் பாத்தியத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. பி.சா.ஆ.10 ஆவணம் வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் ஏற்பட்ட காரணத்தால் அது வாதியின் பாத்தியத்தை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கிற்கு முன்பாக சொத்தை அனுபவம் செய்து வந்தது சம்மந்தமாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது எதிர்வாதம் ஏற்றுகொள்ள கூடியது அல்ல என்றும், தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur